பொது நிருவாகச் சுற்றறிக்கை : 20/2022

எனது இலக்கம் : *HD/H/GQ/REQ/INFO/-01*
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.09.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**பொது நிருவாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் பொதுச் சேவை உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்குப் பொருத்தமான பதவிநிலை உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள்**

இந்த அமைச்சினால் நிர்வகிக்கப்படும் கொழும்பு 05, கெப்பட்டிபொலை மாவத்தையிலுள்ள மாநாட்டு வீடுகளை ஒதுக்கீடு செய்துகொள்வதற்காக விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வது தொடர்பில் புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது,

02. ஒவ்வொரு வருடத்திலும் செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை பின்வரும் அளவுகோள்களுக்கு உட்படும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் பொது நிருவாக அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் அரசாங்க பொதுச் சேவை உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக விண்ணப்பிக்க முடியும்.

i. 2017.12.07 ஆம் திகதிய 32/2017 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் இலக்கம் 05 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தரொருவராக இருத்தல்.
ii. கொழும்பு மாவட்டத்திலுள்ள சேவை நிலையமொன்றில் பணியாற்றுதல்.
iii. விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்ல உரிமையைக் கொண்ட பதவியொன்றை வகிப்பவராக இருக்கக் கூடாது.
iv. சேவை நிலையத்திலிருந்து நிரந்தர வதிவிடத்துக்கான கூகல் வரைபடம் (Google map) மூலம் அளவிடப்பட்ட வான் தூரம் 20 கிலோ மீற்றர்களுக்கு அதிகமாக இருத்தல்.

03. அதற்கிணங்க அரசாங்க பொதுச் சேவை உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்குத் தேவையான ஆவணங்கள் இணைப்பு 01 இலும் இணைப்பு *02* இலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| இணைப்பு 01 | - | கொழும்பு மாவட்டத்தில் பொதுச் சேவை உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்குப் பொருத்தமான பதவிநிலை உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல் கோவை |
| இணைப்பு 02 | - | உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான விண்ணப்பம் |

04. இணைப்பு 02இல் காட்டப்பட்டுள்ள விண்ணப்பம் விண்ணப்பதாரர்களின் முன்னறிவுக்கு மட்டுமுரியதாகும். இணைப்பு 01இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் தொகுதியின் 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இணைய வழியாக மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பம்./ எம். எம். பி. கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி: *0112-695738*
தொலைநகல்: *0112-695279*
மின்னஞ்சல் முகவரி: *pubad.secretary@sltnet.lk*

# பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## பொது நிருவாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் பொதுச் சேவை உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்குப் பொருத்தமான பதவிநிலை உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்

பொது நிர்வாக அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் அரச பொது சேவை உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பொது நிர்வாக அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

### <u>அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள்</u>

**1.0** விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் பின்வரும் ஏற்பாடுகள் மற்றும் தகவல்களை கவனமாக வாசிக்க வேண்டும்.

**2.0 அடிப்படை தகைமைகள் :**

2.1 தாபன விதிக்கோவை அத்தியாயம் Iஇல் வரையறுக்கப்பட்டுள்ளவாறான உத்தியோகத்தராக இருத்தல். மேலும் அந்த அரச உத்தியோகத்தர் 2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 3/2016 மற்றும் 2017.12.07 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 32/2017 மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பதவிநிலையை வகிக்கும் அரச உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.

2.2 கொழும்பு மாவட்டத்திற்குள் உள்ள சேவை நிலையமொன்றில் சேவை செய்தல்.

2.3 விண்ணப்பம் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்திற்கான உரிமையைக் கொண்ட பதவியொன்றை வகிக்காதிருத்தல்.

2.4 சேவை நிலையத்திலிருந்து நிரந்தர வதிவிடத்திற்கு கூகல் வரைபடத்தின் (Google map) உதவியுடன் அளவிட்டு பெற்றுக்கொண்ட வான் தூரம் 20km பார்க்கிலும் அதிகமாக இருத்தல்..

**3.0 விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்:**

(விண்ணப்பதாரரினால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய விடயங்கள்)

3.1 இணைய வழி ஊடாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க, பொது நிர்வாக அமைச்சின் இணையத்தளத்தில் உத்தியோகபூர்வ இல்லங்கள் பிரிவுக்கு சென்று https://forms.gle/jFNAv1zEhFyKkVWe7 இணையவழி விண்ணப்பத்தினை பூர்த்திசெய்ய வேண்டும்.

3.2 விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் திகதிக்குள், நிரந்தர வீடு மற்றும் தற்காலிக வசிப்பிடத்திலிருந்து பணிபுரியும் இடத்திற்கான தூரத்தை கூகுள் வரைபடத்தின் (Google map) உதவியுடன் அளவிட்டு வான்வழித் தூரத்தை விண்ணப்பத்தின் இல. 08 மற்றும் 09 இல் (ii) இல் குறிப்பிட வேண்டும்.

3.3 காத்திருப்போர் பட்டியலில் (இந்த அறிவிப்பின் விடயங்கள் இல. 7.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி) பதிவு செய்யப்பட்டிருந்தால், பதிவு செய்யப்பட்ட திகதியை இல. 15(i) இல் குறிப்பிடப்பிடுதல் வேண்டும். மேலும், அவ்வாறு காத்திருப்போர் பட்டியல்படுத்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாகத்திற்கு பொறுப்பான அமைச்சிலிருந்து உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூல அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். (புகைப்பட பிரதிகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது)

3.4 விண்ணப்பதாரருக்கு நீடித்த நடமாடுதல்/ பயணம்செய்வதில் சிரமங்கள் அல்லது வேறு ஏதேனும் கடுமையான உடல் ஊனம் அல்லது வேறு நீடித்த கடுமையான நோய் நிலைமைகள் இருந்தால், அது பற்றி விண்ணப்பத்தின் இல. 21 (iii)இல் குறிப்பிடுவதற்கு மேலதிகமாக மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

3.5 வாழ்க்கைத் துணைக்கு ஏதேனும் நீடித்த நடமாடுதல்/ பயணம்செய்வதில் சிரமங்கள் அல்லது வேறு ஏதேனும் கடுமையான உடல் ஊனம் அல்லது வேறு நீடித்த கடுமையான நோய் நிலைமைகள் இருந்தால், அது பற்றி விண்ணப்பத்தின் இல. 22(iii) இல் குறிப்பிடுவதற்கு மேலதிகமாக மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

3.6 விண்ணப்பதாரருடன் வசிக்கும் குழந்தைகள்/தங்கிவாழ்பவர்கள் (18 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் மற்றும் திருமணமாகாத பெண் பிள்ளைகள்) மனவளர்ச்சிக் குறைபாடு (Down's Syndrome)/ ஏதேனும் கடுமையான உடல் ஊனம் அல்லது வேறு அங்கவீனங்கள் இருந்தால், அது பற்றி விண்ணப்பத்தின் இல. 22(vi) இல் குறிப்பிடுவதற்கு மேலதிகமாக மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

3.7 விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திகதிக்கு உடன் முந்தைய 2 ஆண்டுகளுக்குள் அனர்த்தம் காரணமாக மோசமான வீட்டுவசதி நிலைமை/உயிர் அச்சுறுத்தல் இருந்தால், அது பற்றி விண்ணப்பத்தின் இல. 25 இல் குறிப்பிடுவதுடன், அதை கிராம உத்தியோகத்தரின் சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

3.8 அரசாங்க சொத்துக் கடன் பெற்று காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், வேலை செய்யும் இடத்திலிருந்து அக்காணி இருக்கும் இடத்துக்கு உள்ள தூரத்தை கூகுள் வரைபடம் (Google map) மூலம் அளவிட்டு

வான்வழித் தூரம் விண்ணப்பத்தின் இல. 25(iii) இல் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3.9 தனது சேவைக் காலத்தில் விருப்பத்திற்குரிய சேவை நிலையமொன்றில் பணிபுரிந்திருந்தால்/ சேவையைப் புரிவதாயின், அந்த சேவை நிலையங்களில் பணிபுரிந்த ஆண்டுகள்/பணிபுரியும் ஆண்டுகள் விண்ணப்ப இல. 30ல் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3.10 மேலும், சேவைக் காலத்தின் போது, அரசாங்க உத்தியோகபூர்வ இல்லத்திற்கான சிறப்புரிமைகள் (தாபன விதிக் கோவையின் XVIII அத்தியாயத்தின் 1இல் அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன) பெறப்பட்டிருந்தால், அது பற்றி விண்ணப்பத்தின் இல 31 மற்றும் 32இல் குறிப்பிடப்பட வேண்டும்.)

3.11 இந்த முறைமையின் மூலம் முன்பு உத்தியோகபூர்வ இல்லத்திற்கு விண்ணப்பித்து, உத்தியோகபூர்வ இல்லமொன்று கிடைக்காத, ஆனால் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்றிருந்தால், அது பற்றி விண்ணப்பத்தின் இல. 33 இல் குறிப்பிடுவதற்கு மேலதிகமாக, உங்கள் புள்ளிகள் அடங்கிய ஆவணத்தின் பிரதியை (பொது நிருவாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட புள்ளி ஆவணம்) விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு புள்ளிகள் ஆவணத்தை இணைத்து அனுப்பாத உத்தியோகத்தர்கள் இதற்கு முன் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்ற உத்தியோகத்தர்கள் அல்ல எனக் கருதப்படும். (இந்த விடயம் 2022ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும்.)

(நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டிய விடயங்கள்)

3.12 விண்ணப்பத்தின் இல. 14(vii) இன் விடயம் தொடர்பாக, விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் தினத்திற்கு உடன் முந்திய 06 மாதங்களுக்குள் கடமையின் தன்மை குறித்து நிறுவனத் தலைவரால் வழங்கப்படும் எழுத்து மூல உறுதிப்படுத்தல் கட்டாயமானதாகும். அந்த எழுத்துமூல உறுதிப்படுத்தலில், வாரத்தின் ஐந்து நாட்களிலும் 08 மணி நேர கடமைக்கு மேலதிகமாக

கடமைகளைச் செய்ய வேண்டியுள்ளமை, வார இறுதி நாட்களிலும் கடமை நிலையத்திற்கு சமூகமளிக்க வேண்டியுள்ளமை, தொடர்ந்து அல்லது அடிக்கடி இரவு வேலைகளில் கடமைகளைச் செய்தல் மற்றும் பணி முறைமாற்றம் (Roster) உள்ளதா போன்ற விடயங்கள் பற்றிய தகவல்கள் குறிப்பிடப்பட முடியும்

3.13 மேற்படி 3.12இன் விடயங்களுக்கு மேலதிகமாக

i. தனது சேவைக் காலத்தில் விருப்பத்திற்குரிய சேவை நிலையமொன்றில் சேவைபுரிந்திருந்தால்/ சேவையைப் புரிவதாயின், அது பற்றிய விபரங்கள்

ii. சொத்துக் கடன் பெற்றிருந்தால் அது பற்றிய தகவல்
iii. அரசாங்க சேவையில் சேர்ந்த பின்னர் 14/2022 பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாகாத வகையில் சம்பளமற்ற லீவு பெற்றிருந்தால் அது பற்றிய விவரங்கள் (சம்பளமற்ற மகப்பேற்று லீவினைத் தவிர)
iv. எந்தவொரு அரசாங்க உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பிலும் நிலுவையான உத்தியோகபூர்வ இல்ல வாடகை இருந்தால் அது பற்றிய தகவல்
v. 1985ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கம், 1981ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கம், 1974ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க திருத்தச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1969ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரச வீடு (உடைமையை மீளப் பெறுதல்) சட்டத்தின் பிரிவு 3இன் கீழ் வழக்கு குற்றச்சாட்டு ஒன்றில் குற்றவாளியாக இருந்தால், அது பற்றிய விபரங்கள்

தனிப்பட்ட கோப்பில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது வேறு உறுதிப்படுத்தும் எழுத்துமூல ஆவணங்கள் அனைத்தையும் நிறுவனத்தின் தலைவரால் சான்றுப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**4.0 விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடைமுறை:**

4.1 இணைய வழி ஊடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க, பொது நிர்வாக அமைச்சின் இணையத்தளத்தின் வீடமைப்பு அபிவிருத்திப் பிரிவைப் பார்வையிட்டு, https://forms.gle/jFNAv1zEhFyKkVWe7 இணையவழி விண்ணப்பத்தை பூர்த்திசெய்து விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டிய

பிரிவுகளைப் பூர்த்தி செய்த பின்னர் அவ்விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

4.2 அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை தனிப்பட்ட கோப்பிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய பகுதிகளை பூர்த்தி செய்த பின்னர் நிறுவனத் தலைவரின் தனிப்பட்ட உறுதிப்படுத்தலை (3.12 மற்றும் 3.13இன் பிரகாரம்) மேலே இணைப்பு 3.0 இல் மேலதிக விடயங்களாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஆவணங்களை இணைத்து ஒக்டோபர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன் பொது. நிர்வாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு வருகைதந்து விண்ணப்பக் குறிப்புப் பதிவேட்டில் கையொப்பமிட்டு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

4.3 ஒக்டோபர் 15க்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

**5.0 தெரிவுசெய்யும் நடைமுறை:**

5.1 குறித்த ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பொது நிர்வாகத்திற்கு பொறுப்பான அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களும் உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பான குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்பட்டு 6.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் முறையின்படி புள்ளிகள் வழங்கப்படும். அந்த புள்ளிப் பட்டியல் அந்தந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி பொது நிர்வாகத்திற்கு பொறுப்பான அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

5.2 அவ்வாறு பொது நிர்வாக அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட பின்னர், இங்கு புள்ளிகள் வழங்ப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு புள்ளிகள் வழங்குவதில் அநீதி

இடம்பெற்றுள்ளதாக நீங்கள் உணர்ந்தால், நவம்பர் 10 ஆம் திகதி வரை, உத்தியோகபூர்வ இல்ல குழுவின் தலைவருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

5.3 அத்தகைய அனைத்து மேன்முறையீடுகளும் உத்தியோகபூர்வ இல்ல குழுவினால் பரிசீலிக்கப்பட்ட பின்னர், அதிக புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து, வெற்றிடமாக உள்ள உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கையை பார்க்கிலும் இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

5.4 தெரிவுசெய்யும் முறைமையொன்றின் கீழ், பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகளின் ஒழுங்கிற்கு ஏற்ப எதிர்வரும் ஆண்டில் வீட்டு உரிமைக்கு தகுதிபெற்றுள்ள உத்தியோகத்தர்களின் இறுதி பெயர் பட்டியல் பொது நிர்வாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் டிசம்பர் 10 ஆம் திகதி பொது நிர்வாகத்திற்கு பொறுப்பான அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

5.5 விண்ணப்பதாரரினால் மேலே 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிப்படுத்தும் ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்கவில்லை என்றால், அந்த விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் விண்ணப்பதாரருக்கு கிடைக்காது போகும்.

5.6 சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் குறைந்தபட்சம் ஒரு ஆவணமேனும் போலியானது அல்லது சட்டபூர்வமானது அல்ல என கண்டறியப்பட்டால், அதே காரணத்திற்காக விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**6.0 தெரிவுசெய்வதற்காக பயன்படுத்தப்படும் புள்ளிகள் வழங்கும் முறைமை:**

6.1 விண்ணப்பதாரருக்கு பெற்றுக்கொள்ள முடியுமான அதிகபட்ச புள்ளிகளின் அளவு 100 புள்ளிகளாகும்.

6.1.1 இங்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு ஏற்பவே விண்ணப்பதாரருக்கு புள்ளிகள் கிடைக்கின்றன..

i. காத்திருப்போர் பட்டியலில் (இந்த அறிவிப்பின் விடய இல. 7.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி) பதிவு செய்யப்பட்டிருந்தால், அவ்வாறு பதிவு

செய்யப்பட்டிருக்கும் ஒரு வருடத்திற்கு 01 புள்ளி வீதம் புள்ளிகள் வழங்கப்படும்.

(அதிகபட்ச புள்ளிகள் 10)

ii. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திகதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் இடத்திலிருந்து சேவை நிலையத்திற்கு கூகுள் வரைபடத்தின் (Google map) மூலம் அளவிடப்படும் வான்வழி தூரத்திற்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

a) 21km இருந்து 30km வரை - புள்ளிகள் 5
b) 31km இருந்து 40km வரை - புள்ளிகள் 10
c) 41km இருந்து 50km வரை - புள்ளிகள் 15
d) 51km இருந்து 60km வரை - புள்ளிகள் 20
e) 61km இருந்து 70km வரை - புள்ளிகள் 25
f) 71km இற்கு மேல் - புள்ளிகள் 30

(அதிகபட்ச புள்ளிகள் 30)

iii. கடமையின் தன்மைக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படுகின்றன. (தங்கள் வழக்கமான கடமைகளின் தன்மைக்கு ஏற்ப அவர்கள் சேவை செய்யும் இடத்திற்கு அருகில் வசிக்க வேண்டியிருந்தாலும் கூட, வழக்கமாக அல்லது அடிக்கடி அல்லது இரவு வேலைகளில் கடமைகளைச் செய்யத் தயாராக இருக்க வேண்டிய உத்தியோகத்தர்கள்)

a) வாரத்தின் ஐந்து நாட்களிலும் 08 மணிநேர கடமைக்கு மேலதிகமாக கடமையாற்ற வேண்டியிருத்தல். (5 புள்ளிகள்)
b) வார நாட்கள் ஐந்திற்கு மேலதிகமாக வார இறுதி நாட்களிலும், கடமை நிலையத்திற்கு சமூகமளிக்க வேண்டியிருத்தல். (5 புள்ளிகள்)
c) இரவு நேரங்களில் கடமைகளைச் செய்ய வேண்டியிருத்தல். (10 புள்ளிகள்)

(அதிகபட்ச புள்ளிகள் 20)

iv. விண்ணப்பதாரருக்கு நடக்க அல்லது பயணம் செய்ய சிரமமான முறையில் நீடித்த கடுமையான உடல் ஊனம் இருந்தால் - 03 புள்ளிகள்

v. வாழ்க்கைத் துணைக்கு கடுமையான உடல் ஊனம் இருந்தால் - 03 புள்ளிகள்

vi. 18 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் மற்றும் திருமணமாகாத பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு, ஒரு பிள்ளைக்கு 01 புள்ளி வீதம் புள்ளிகள் வழங்கப்படும்.

(அதிகபட்ச புள்ளிகள் 06)

vii. 05 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இருத்தல். . (05 புள்ளிகள்)

viii. விண்ணப்பதாரருடன் வசிக்கும் குழந்தைகள்/ தங்கிவாழ்பவர்கள் (18 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் மற்றும் திருமணமாகாத பெண் பிள்ளைகள்) மனவளர்ச்சி குறைபாடு/ கடுமையான உடல் ஊனம் அல்லது வேறு அங்கவீனங்கள் இருத்தல்.

(06 புள்ளிகள்)

## குறிப்பு :

***மேலே குறிப்பிடப்பட்ட vi, vii மற்றும் viii விடயங்களுக்கு கிடைக்கும் புள்ளிகளின் மொத்தம் அதிகபட்சம் 10 புள்ளிகளுக்கு மேற்படாத வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.***

***உ-ம்:***

***3 மற்றும் 6 வயதுடைய இரண்டு பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தில், ஒரு மூத்த பிள்ளைக்கு மனவளர்ச்சி குறைபாடு அறிகுறி இருந்தால்***

***மேலே குறிப்பிடப்பட்ட vi, vii மற்றும் viii விடயங்களுக்கு கிடைக்கும் புள்ளிகளின் அளவு வழங்கப்படும் புள்ளிகளின் அளவு,***

| | | |
|---|---|---|
| (***vi***) ***விடயத்திற்கு புள்ளிகள்*** | = | ***02*** |
| (***vii***) ***விடயத்திற்கு புள்ளிகள்*** | = | ***05*** |
| (***viii***) ***விடயத்திற்கு புள்ளிகள்*** | = | ***06*** |
| ***புள்ளிகள்*** | = | ***<u>13</u>*** |

***அதன்படி, vi, vii, viii ஆகிய விடயங்களுக்கு கிடைத்துள்ள புள்ளிகளின் எண்ணிக்கை 10ஐத் தாண்டியிருப்பதால், அந்த விண்ணப்பத்திற்கு vi, vii, viii ஆகிய விடயங்களுக்கு 10 புள்ளிகள் மட்டுமே வழங்கப்படும்.***

ix. விண்ணப்பிக்கும் போது வாழ்க்கைத் துணை அரச உத்தியோகத்தராக இருத்தல்.

(05 புள்ளிகள்)

x. கிட்டிய 02 வருடங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்றிருந்தும், உத்தியோகபூர்வ இல்ல உரிமை கிடைக்காமல், மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த உத்தியோகத்தருக்கு, விண்ணப்பித்த ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம் கிடைக்கும்.

(அதிகபட்ச புள்ளிகள் 04)

xi. விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திகதிக்கு உடன்முந்திய 2 வருட காலப்பகுதியில் அனர்த்த நிலைமையினால் மோசமான வீட்டுநிலைமை (உ-ம்: வெள்ளம்/மண்சரிவு போன்ற அனர்த்த நிலைமைகள்) /உயிர் அச்சுறுத்தல் உள்ளதாக கிராம உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்படுதல்.

(08 புள்ளிகள்)

6.1.2 விண்ணப்பதாரர்களுக்கு பின்வரும் அளவுகோல்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

i. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது பயன் பெறும் நிறுவனமொன்றில் (விருப்பத்திற்குரிய சேவை நிலையம்) பணிபுரியும் உத்தியோகத்தராக இருத்தல்.

(05 புள்ளிகள்)

ii. அரச சேவையில் சேர்ந்த பின்னர் சம்பளமற்ற லீவு (சம்பளமற்ற மகப்பேற்று லீவு தவிர) பெற்றிருந்தால், புள்ளிகள் பின்வருமாறு குறைக்கப்படும்.

a) 01வருடத்திற்கு குறைவு - புள்ளிகள் (03)
b) 01வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட - புள்ளிகள் (05)
c) 03வருடங்களுக்கு அதிகம் - புள்ளிகள் (07)

(அதிபட்ச மறை புள்ளிகள் 07)

iii. அரச உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பான வீட்டு வாடகை நிலுவை இருத்தல்

(அதிபட்ச மறை புள்ளிகள் 15 )

iv. 1985ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கம், 1981ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கம், 1974ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க திருத்தச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1969ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரச வீடு (உடைமையை மீளப் பெறுதல்) சட்டத்தின் பிரிவு 3இன் கீழ் உடைமை மாற்றத்தின் கீழ் வழக்கு குற்றச்சாட்டு ஒன்றில் குற்றவாளியாக இருத்தல்.

(மறை புள்ளிகள் 25)

v. அரசாங்க சொத்துக் கடனைப் பெற்று கொழும்பு நகர எல்லைக்குள் அல்லது நீங்கள் பணிபுரியும் அலுவலகத்திலிருந்து 20 கி.மீ தொலைவுக்குள்

காணியொன்றை கொள்வனவு செய்திருந்தத்தல்.

(மறை புள்ளிகள் 05)

vi. அரசாங்க சேவையில் இணைந்த பின்னர் சேவை தேவைகளுக்காகவன்றி தனிப்பட்ட தேவைகளுக்காக பொது நிருவாக சுற்றறிக்கை 14/2022 இன் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதல்லாத வகையில் சம்பளமற்ற வெளிநாட்டு லீவு பெற்றிருத்தல் 03 புள்ளிகள் குறைக்கப்படும்.

அ) 01வருடத்திற்கு குறைவு – புள்ளிகள் (01)

ஆ) 01வருடத்திற்கும் 03 வருடத்திற்கு இடைப்பட்ட - புள்ளிகள் (02)

இ) 03 வருடத்திற்கு மேல் - புள்ளிகள் (03)

(அதிபட்ச மறை புள்ளிகள் 07 )

vii. விண்ணப்பதாரர் முந்தைய 10 ஆண்டுகளில் அரசாங்க பொதுச் சேவை வீட்டுச் சலுகையைப் பெற்றிருந்தால், அத்தகைய சலுகையைப் பெற்ற ஒரு ஆண்டுக்கு 01 புள்ளி வீதம் குறைக்கப்படும். (அதிபட்ச மறை புள்ளிகள் 10 )

viii. வாழ்க்கைத் துணையின் பெயரில் உடன் முந்திய 10 ஆண்டுகளில் அரச பொது சேவை வீட்டு சலுகைகளைப் பெற்றிருந்தால் வருடமொன்றிற்கு 01 புள்ளி வீதம் குறைக்கப்படும்.

(அதிபட்ச மறை புள்ளிகள் 10)

6.1.3. பல உத்தியோகத்தர்களுக்கு சமமான புள்ளிகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில், சேவை மூப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

6.2 இந்த புள்ளி வழங்கும் நடைமுறையில், தாபன விதிக் கோவையின் அனைத்து ஏற்பாடுகளுக்கும் அமைவாக புள்ளிகள் வழங்கப்படும்.

**7.0 காத்திருப்பு பட்டியல்**

7.1 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் அனைத்து உத்தியோகபூர்வ இல்ல கோரிக்கைகளும் புதிய

காத்திருப்பு பட்டியலில் பதிவுசெய்யப்படும். பழைய காத்திருப்புப் பட்டியலில் பதிவுசெய்யப்படடுள்ள வின்னப்பதாரர் ஒருவர், 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் மீண்டும் இல்லத்திற்கான கோரிக்கையொன்றை சமர்ப்பித்தால் அவரின் விபரங்கள் புதிய காத்திருப்புப் பட்டியலில் உள்ளடக்கப்படும்.

7.2 தற்போது, பொது நிருவாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் உள்ள அரச பொது சேவை உத்தியோகபூர்வ இல்ல தேவையுடன் பழைய காத்திருப்புப் பட்டியலில் உள்ள உத்தியோகத்தர்கள் இருந்தால் அவர்கள் 2022 செப்டம்பர் 15 முதல் 2022 அக்டோபர் 15 ஆம் திகதிக்கு இடையேயான காலத்தில் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், பழைய காத்திருப்பு பட்டியல் 2022 அக்டோபர் 15 அன்று காலாவதியாகும்.

8.0 போலியான தகவல் சமர்ப்பிக்கப்பட்டால், விண்ணப்பதாரர் மற்றும் இதுபோன்ற போலியான தகவல்களை வழங்கிய அனைத்து உத்தியோகத்தர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

9.0 மேற்படி 5.3இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது உத்தியோகபூர்வ இல்லம் கிடைப்பதற்கான தகுதிகளை பூர்த்திசெய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

10.0 இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானது.

**செயலாளர்**

**பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**2022.09.15**

## பொது நிருவாக அமைச்சின் கீழுள்ள கொழும்பு மாவட்டத்தின் அரசின் பொது சேவை உத்தியோகபூர்வ இல்லத்திற்கான விண்ணப்பம்

அலுவலக உபயோகத்திற்காக

| | | | |
|---|---|---|---|
| (01) | முழுப் பெயர் | : | ……………………………………………………………………… ………………………………………………………………………… |
| (02) | முதலெழுத்துக்களுடன் பெயர் (உதா: பீ. எஸ். பி. பெரேரா) | : | ……………………………………………………………………… |
| (03) | பெண்/ ஆண் பால்நிலை | : | பெண் ☐ ஆண் ☐ |
| (04) | தேசிய அடையாள அட்டை இலக்கம் | : | ………………………………………………………………………… |
| (05) | பிறந்த திகதி | : | வருடம் : …… மாதம் : …… திகதி : …… |
| (07) | சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்குள்ள திகதி | : | வருடம் : …… மாதம் : …… திகதி : …… |
| (08) | i. நிரந்தர முகவரி | : | ……………………………………………………………………… ……………………………………………………………………… |
| | ii. நிரந்தர முகவரியிலிருந்து சேவை நிலையத்துக்குள்ள தூரம் (km) | : | ……………………………………………………………………… |
| (09) | i. தற்காலிக முகவரி | : | ……………………………………………………………………… ……………………………………………………………………… |
| | ii. தற்காலிக முகவரியிலிருந்து சேவை நிலையத்துக்குள்ள | : | ……………………………………………………………………… |

தூரம் (km)

(10) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ……………………………………………………………………….

(11) வதிவிட தொலைபேசி இலக்கம் :- : ……………………………………………………………………….

(12) மின்னஞ்சல் முகவரி : ……………………………………………………………………….

(13) காத்திருப்புப் பட்டியிலில் பதிவு செய்யப்பட்டுள்ளீரா? : ஆம் ☐ இல்லை ☐

i. பதிவு செய்யப்பட்டிருப் பின், அது எத்திகதியில் இருந்து? : வருடம் : …… மாதம் : …… திகதி : ……

(14) தற்போதைய தொழில் பற்றிய தகவல்

i. சேவை நிலையம் : ……………………………………………………………………….

ii. முகவரி : ……………………………………………………………………….
……………………………………………………………………….

iii. அலுவலக தொலைபேசி இலக்கம் : ……………………………………………………………………….

iv. பதவி : ……………………………………………………………………….

v. சேவை (உதா: இலங்கை நிர்வாக சேவை ) : ……………………………………………………………………….

vi. தரம் : ……………………………………………………………………….

vii. தொழிலின் இயல்பு : ……………………………………………………………………….
……………………………………………………………………….
……………………………………………………………………….

viii. நீர் இடமாற்றம் பெறத்தக்க (transferable service) சேவைக்கு உரியவரா? : ஆம் ☐ இல்லை ☐

(15) சம்பள விபரம்

i. வருடாந்த சம்பளம் : ………………………………………………………………………..

ii. சம்பள அளவுத்திட்டம் : ………………………………………………………………………..

iii. சம்பள ஏற்றத் திகதி : ………………………………………………………………………..

(16) அரச சேவைக்கு நியமனம் பெற்ற திகதி : வருடம் : …… மாதம் : …… திகதி : ……

(17) பதவிநிலை சேவைக்கு நியமனம் பெற்ற திகதி : வருடம் : …… மாதம் : …… திகதி : ……

(18) தகுதிகாண் சேவையில் உள்ள உத்தியோகத்தர் ☐ நிரந்தர சேவையில் உள்ள உத்தியோகத்தர் ☐

(19) கொழும்பு மாவட்டத்திற்கு நியமனம் / இடமாற்றம் பெற்ற திகதி : வருடம் : …… மாதம் : …… திகதி : ……

(20) விண்ணப்பதாரர் நடக்க / பயணிக்க முடியாத வகையில் அல்லது வேறு ஏதேனும் கடுமையான உடல் ஊனம் அல்லது பிற கடுமையான நோய் நிலையால் பாதிக்கப்பட்டிருப்பின், அதைப் பற்றிய தகவல் : ………………………………………………………………………..

………………………………………………………………………..

………………………………………………………………………..

………………………………………………………………………..

(21) **விவாகமானவர், விவாகமாகாதவர் என்பது பற்றி** : விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

விவாகமானவர் எனின்,

**வாழ்க்கைத் துணையின் தகவல்**

i. பெயர் : ………………………………………………………………………..

ii. சேவை நிலையம் : ………………………………………………………………………

iii. விண்ணப்பதாரர் நடக்க / பயணிக்க முடியாத வகையில் அல்லது வேறு ஏதேனும் கடுமையான உடல் ஊனம் அல்லது பிற கடுமையான நோய் நிலையால் பாதிக்கப்பட்டிருப் பின், அதைப் பற்றிய தகவல், : ………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………

**பிள்ளைகளின் தகவல்**

iv. பிள்ளைகளின் எண்ணிக்கை : ………………………………………………………………………

v. பிள்ளைகளின் பெயர் மற்றும் வயது :

| பெயர் | வயது |
|---|---|
| | |
| | |
| | |
| | |

vi. மனவளர்ச்சிக் குறைபாட்டு அறிகுறி (Down's Syndrome)/ கடுமையான உடல் ஊனம் அல்லது வேறு ஊனங்கள் இருப்பின், அது பற்றிய தகவல் : ………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………

| | | | | |
|---|---|---|---|---|
| (22) | உத்தியோகபூர்வ இல்லத்திற்கான உரிமை கிடைத்தால், தனது குடும்பத்துடன் அதில் வசிப்பதற்கு எதிர்பார்க்கின்றீரா? | : | ஆம் ☐ | இல்லை ☐ |
| (23) | உமக்கு / வாழ்க்கைத் துணைக்கு / பிள்ளைகளுக்கு உமது சேவை நிலையத்திலிருந்து 20Km இற்குள் வீடு / வீடுகள் இருகின்றதா? | : | ஆம் ☐ | இல்லை ☐ |
| (24) | உடன்முன்னரான 2 வருட காலப் பகுதிக்குள் மோசமான வீட்டு வசதி / உயிர் அச்சுறுத்தல் ஏதேனும் இருக்கின்றதா? | | ஆம் ☐ | இல்லை ☐ |

இருப்பின், அது பற்றிய தகவல். : ………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………

| | | | | |
|---|---|---|---|---|
| (25) | நீர் வீட்டு / ஆதன கடனைப் பெற்றுள்ளீரா? | : | ஆம் ☐ | இல்லை ☐ |

வீட்டு / ஆதன கடனைப் பெற்றிருந்தால்;

i. கடன் பெற்ற திகதி : ………………………………………………………………………………

ii. வீட்டின் / ஆதனத்தின் முகவரி : ………………………………………………………………………………

iii. தபோதைய சேவை நிலையத்திலிருந்து உள்ள தூரம் (km) : ………………………………………………………………………………

(26) ஏதேனும் அரசின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குரிய வீட்டு வாடகைக்கான நிலுவைத் தொகை உள்ளதா? : ஆம் ☐ இல்லை ☐

இருப்பின், அது பற்றிய தகவல்.

| குறித்த திணைக்களம் | நிலுவைத் தொகை (ரூபா.) | நிலுவைத் தொகை உரித்தாகும் கால எல்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

(27) 1985 இலக்கம்: 45, 1981 ஆம் இலக்கம்: 08, 1974 ஆம் இலக்கம்: 40 மற்றும் 1971 இலக்கம் : 03 திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் இலக்கம் : 07 இனையுடைய அரச வீடுகள் ( உடைமையை மீளப் பெறல்) சட்ட இலக்கம் 3 ஆம் பிரிவின் கீழ் வழக்கு சார்ந்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளீரா? : ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின், அது பற்றிய தகவல். : ……………………………………………………………………….

……………………………………………………………………….

……………………………………………………………………….

(28) அரச சேவையில் இணைந்ததன் பின்னர் சம்பளமற்ற லீவுகளைப் பெற்றுள்ளீரா? (சம்பளமற்ற பிரசவ : ஆம் ☐ இல்லை ☐

லீவு தவிர்ந்த)

ஆம் எனின், அது பற்றிய தகவல்.

| பெற்ற வருடம் | சம்பளமற்ற லீவுகளின் அளவு |
|---|---|
| | |
| | |
| | |

(29) அரச சேவைக்கு வந்ததன் பின்னர் சேவைத் தேவை தவிர தனிப்பட்ட தேவைக்கு வெளிநாடு சென்றுள்ளீரா? 14/2022 ஆம் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக) : ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின், அது பற்றிய தகவல்.

| பெற்ற வருடம் | கால வரையறை | சம்பளமற்ற / சம்பளத்துடன் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

(30) சேவைக் காலத்தினுள் விருப்பத்திற்குரிய சேவை நிலையமொன்றில் சேவையாற்றினீரா / சேவையாற்றுகின்றீரா ? : ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின், அது பற்றிய தகவல்.

| சேவை நிலையம் | சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

(31) நீர் உத்தியோகபூர்வ இல்ல வசதிகளை ஏற்கனவே பயன்படுத்தியுள்ளீரா? : ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின், அது பற்றிய தகவல்.

| பதவி | அமைச்சு | வசித்திருந்த ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

(32) வாழ்க்கைத் துணை உத்தியோகபூர்வ இல்ல வசதிகளைப் பெற்றுள்ளாரா? : ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின், அது பற்றிய தகவல்.

| பதவி | அமைச்சு | வசித்திருந்த ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |

(33) உடன்முன்னரான 02 வருடத்தில் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக விண்ணப்பித்திருந்து, குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெற்றிருந்தால், உத்தியோகபூர்வ இல்லத்திற்கான உரிமை கிடைக்காமல் மீள விண்ணப்பித்த

உத்தியோகத்தராயின், அது பற்றிய தகவல்*

| வருடம் | புள்ளியின் அளவு (%) |
|---|---|
| | |
| | |

இங்கு கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் இதன் மூலம் உறுதியளிக்கின்றேன், மேலும் அதற்கான அனைத்துப் பொறுப்பையும் நானே ஏற்கிறேன். மேற்படி தகவல்கள் போலியானது என நிரூபிக்கப்பட்டால் உத்தியோகபூர்வ இல்லத்திற்கான உரிமையை இழக்கவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் விதிக்கப்படும் எந்தவொரு ஒழுக்காற்று விசாரணைக்கும் முகங்கொடுக்க நேரிடும் என நான் அறிகின்றேன்.

…………………………..
……………………………………….
திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

**தாபன நிர்வாகப் பிரிவுத் தலைவரின் உறுதிப்படுத்துகை**

மேற்படி இலக்கம் 25 முதல் 31 வரை விண்ணப்பதாரர் சமர்ப்பித்த தகவல்கள் பிரத்தியேகக் கோப்பின் படி சரியானவை என இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

…………………………..
……………………………………….
திகதி உத்தியோகபூர்வ பதவி முத்திரை மற்றும் ஒப்பம்

---

**நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்துகை**

விண்ணப்பதாரியினால் சமர்ப்பித்த அனைத்து  தகவல்களும் சரியானவை என இதன் மூலம் உறுதி செய்கிறேன்.

………………………..
……………………………………
திகதி நிறுவனத் தலைவரின் உத்தியோகபூர்வ பதவி முத்திரை மற்றும் ஒப்பம்